

எமது குடும்ப விளக்காக விளங்கிய

புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும் இளவாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

# திருமதி.சரஸ்வதி சின்னத்தம்பு

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப் பெற்ற

# நினைவுமலர்

22.03.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும்
இளவாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்**

# திருமதி சரஸ்வதி சின்னத்தம்பு

அவர்களின் சிவபதப்பேறு குறித்து

வெளியிடப் பெற்ற

**நினைவு தீபம்**

**22.03.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்புத் தெய்வத்தின் திருப்பாதங்களுக்கு
இத்தீபம்

# சமர்ப்பணம்

எமது குடும்பப் பெருவிருட்ஷத்திற்கு வேராகிநின்று நிழல் தந்து தீபமாகி ஒளியூட்டி நாம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி நின்று இன்று எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டு சிவபதப்பேற்றை அடைந்த எம் அன்புத் தெய்வத்தின் பாதங்களுக்கு இத்தீபத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!



**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# திரு.கந்தப்பிள்ளை சின்னத்தம்பு

(மலேயன் பென்சனியர்)

மண்ணில்
22.09.1900

விண்ணில்
28.09.1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர்
# திருமதி.சரஸ்வதி சின்னத்தம்பு
# அவர்கள்

மண்ணில் 21.02.1916

விண்ணில் 17.02.2010

திதி: மாசி மாதப் பூர்வபக்கச் சதுர்த்தி

## திதி வெண்பா

சீரார் விரோதியிலே சேர்மாசிப் பூர்வபக்கம்
பாரோர் புகழ் சதுர்த்தி நல்திதியில் - ஊர் போற்ற
வாழ்ந்தவோர் அன்னை சரஸ்வதிநம் ஆனைமுகன்
தாளடைந்தார் என்றேநீ சாற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ராமஜெயம்

# திருப்பாசுரம்

## திருப்பல்லாண்டு

எந்தா ளெம்பெரு மானுன்ற னக்கடி
யோமென் றெழுத்துப்பட்ட
அந்நாளே, அடி யோங்கள டிக்குடில்
வீடு பெற்றுய்ந்தது காண்
செந்நாள் தோற்றித் திருமது ரையுட்சிலை
குனித்து ஐந்தலைய
பைந்தா கத்தலைப் பாய்ந்தவனே, உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருவாய்மொழி

புண்ணியம் செய்து நல்ல
புனலொடு மலர்கள் தூவி
எண்ணுமி னெந்தை நாமம்
இப்பிறப் பறுக்குமப்பால்
திண்ணம் நாம் அறியச் சொன்னோம்
செறிபொழில் அனந்த புரத்து
அண்ணலார் கமலபாதம்
அணுகுவார் அமரராவார்

## திருமொழி

மடிவழி வந்த நீர்புனல் சோர
வாயிலட்டிய கஞ்சியும் மிண்டே
கடை வழிவாரக் கண்ட மடைப்பக்
கண்ணுறக்கம் ஆவதன் முன்னம்
தொடை வழியும்மை நாய்கள் கவரா
சூலத்தா லும்மைப் பாய்வதுஞ் செய்யார்
இடை வழியில் நீர் கூறையும் இழவீர்
இருடி கேசன் என்று ஏத்தல்லீரேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய திருமொழி

தந்தை தாய் மக்களே சுற்றம் என்று
உற்றவர் பற்றி நின்ற
பந்தமார் வாழ்க்கையை நொந்து நீ
பழியெனக் கருதினாய் போலும்
அந்தமாய் ஆதியாய் ஆதிக்கும்
ஆதியாய் ஆயனாய
மைந்தனார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே

## திருமாலை

வேத நூல் பிராயம் நூறு
மனிதர் தாம் புகுவரேலும்
பாதியும் உறங்கிப் போகும்
நின்றதிற் பதினையாண்டு
பேதை பாலகனதாகும்
பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகருள்ளானே.

## திருவாய்மொழி

நாடிர் நாள்தொறும் வாடா மலர்கொண்டு
பாடிர் அவன்நாம் வீடே பெறலாமே.

ஹரி ஓம் கோவிந்த நாம சங்கீர்த்தனம்
கோவிந்தா கோவிந்தா

ஹரி ஓம் தத் சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இப்பூவுலகிற் சரஸ்வதி அம்மா....

கிழக்கு மேற்கு நாடுகளின் மற்றும் போக்கு வரவு பெருமளவு நிகழும் இந்துமாகடலில் மிகுந்த வளமான தளமாக விளங்குவது இலங்கைத் தீவு. அதன் தலையெனச் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்திற் செம்மண் வளம் ஆழமில்லாத தண்ணீர்க் கிணறுகளுடன் கமத்தொழிற் சிறப்புமிக ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் அருள் பாலிக்க விளங்குவது புன்னாலைக்கட்டுவன் என்னும் ஊர். அவ்வூரில் விசுவநாத முதலியார் வழிவந்த பெரநிலக்கிழாரான வழித்தோன்றல் கதிர்காமர் ஆறுமுகமும் தண்டிகை முதலியார் இளவாலைத்தம்பர் மகள் சிதம்பரமும் தந்த இரண்டாவது மகன் தாமோதரம்பிள்ளை. இவரது சகோதரர் தமிழும் ஆங்கிலமும் கற்று உத்தியோகம் வகித்த போதிலும் குடும்பத்தின் காணி பூமிகளைப் பராமரித்துப் பேணும் பொறுப்பை ஏற்றிருந்த தாமோதரம்பிள்ளை அவர்கள் சின்னக்குட்டிப்பிள்ளைத் திருமணம் செய்து கத்தரி, வெண்டி முதலான சிற்றுணவுப் பயிர்களும் புகையிலை வெங்காயம் போன்ற காசுப்பயிர்களும் விளைவித்து நிறை செல்வந்தராக விளங்கினார். இவர்களுக்குத் தலைமகளாகத் தோன்றியவர் சரஸ்வதி அம்மா. அவர் புன்னாலைக்கட்டுவன் அரசினர் பாடசாலையில் கல்வி பயின்றார். பின்னர் இளவாலையிற் பெரிய தகப்பனார் வீட்டிலே தங்கியிருந்து இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கற்றார். அந்நாளில் குலமரபின்படி பெண்மை எய்திய பின் பெற்றோருக்கு உதவியாக வீட்டிலே வாழ்ந்து வரலானார்.இவரது சகோதரர்கள் கனகசுந்தரம் (கிளாக்கர்) வன்னித்தம்பி, (Railway Head guard) செல்வத்துரை (Station Master), ஆறுமுகம் (அதிபர்) நால்வரும் இளையசகோதரி செல்வநாயகியும் ஆவார். சரஸ்வதி அம்மா தனது 16வது வயதில் தண்டிகை முதலியார் வழிவந்த கந்தப்பிள்ளை உபாத்தியாயர் கருகம்பனையை சார்ந்த வள்ளிப்பிள்ளை ஆகியோரின் இளைய மகனும் மலேசியாவில் நீர்ப்பாசன திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தருமான சின்னத்தம்பு அவர்களை 1931 இல் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். மணமாலை சூட்டியபின் அன்புக்கணவர் அவரை மலேசியாவிற்கு அழைத்துச் செல்லலானார். பெற்றோர் இவருக்கு உதவிக்காக ஒரு பெண்பிள்ளையையும் சேர்த்து அனுப்பி வைத்தனர். மலேசியாவில் சின்னத்தம்புவுக்கு பதவி உயர்வும் பணவரவும் வளரலாயிற்று.

தலைப்பிரசவத்திற்காக சின்னத்தம்புவின் தமையனார் மலேசியாவில் புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்ற செல்லப்பா அவர்கள் மலேசியா சென்று சரஸ்வதி அம்மாவை யாழ்ப்பாணம் அழைத்து வந்தார். மூத்த மகளுக்கு காரிதாசிவதேவி எனப் பெயரிட்டாலும் கங்காதேவி எனவே அழைத்தனர். இரண்டாவது குழந்தை சரோஜினிதேவி மலேசியாவிலேயே பிறந்தது. மூன்றாவது பிள்ளைக்காக கணவரே யாழ்ப்பாணம் அழைத்து வந்து உற்றார் உறவினர்களுடன் தங்கி சில மாதம் மகிழ்ந்திருந்து மலேசியா திரும்பினார். பின்பு ஆண்குழந்தை கிடைத்த செய்தியறிந்து மகிழ்ந்து கணேசலிங்கம் எனப் பெயரிடும்படி அறிவித்தார்.

மேற்கே வெடித்த இரண்டாம் உலகப் போர் கிழக்கிலும் பரவலாயிற்று யப்பானியர் சீன, சீயம் முதலான நாடுகளைக் கைப்பற்றி மலேசியாவிலும் காலூன்றித் தொடங்கினார். அந்நாளிலிருந்த செய்தித் தொடர்பு கடிதம் மட்டுமே நீர் மூழ்கிகள் கப்பல்களை ஆழ்த்தத் தொடங்கியதால் உணவுப் பொருள்கள் கூடக் கிடையாத அவல நிலை மேலோங்கிற்று கிடைத்த ஆண்பிள்ளையைக் காணவோ சுயநலம் அறியவோ முடியாத நிலையில் தந்தை போர்ச் சூழலில் கணவரின் நிலை பற்றித் தெரியாத வேதனையில் இலங்கையில் இளம் மனைவி மூன்று பிள்ளைகளுடன் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகரையும் கணவனையும் மாறி மாறி நினைத்தவாறே நடைப் பிணமாகக் காலங் கழித்திருந்தார். கணவரின் தாயார் படுக்கையிற் கிடக்கத் தொடங்கிய போது இளவாலைக்கு வந்திருந்து தூக்கிப் பறித்து ஆதரவாக இருந்தமையை எல்லோரும் பாராட்டினர்.போர் நிகழ்ந்து கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிற் செஞ்சிலுவைச் சங்கத்தினர் உலகின் பிற பகுதிகளுடன் தொடர்பிழந்து வாடுவோருக்கு வானொலி வாயிலாக ஒரு சில நிமிடம் சுக செய்தி தெரிவிக்கக் கூடிய புதிய சேவையையும் தொடங்கினர் ஆனாலும் அக்காலத்தில் யாழ்ப்பாணம் முழுவதிலும் எங்காவது ஒரு சிலரிடமே வானொலி இருந்தது. நல்ல காலம்! மாரீசன் கூடல் இளவாலையில் வானொலி ஒருவரிடம் இருந்தது. சின்னத்தம்புவின் தமையனார் செல்லப்பா மலேசியாவிலிருக்கும் தம்பியார், இங்கிருக்கும் மனைவி, மற்றும் நெருங்கிய உறவினர் ஆகியோரின் பெயர் விபரங்களை எழுதிக்கொடுத்து ஒவ்வொரு நாளும் மாரீசன் கூடலுக்குத் திரிந்து செய்தி ஏதாவது வானொலியில் வந்ததா என விசாரித்து வந்தார். ஒரு நாள் ஆவலுடன் காத்திருந்த சுக செய்தி கிடைத்தது. தமையனார் அவசரமாகச் செயற்பட்டார். புன்னாலைக்கட்டுவனில் இருந்த மனைவி மக்களுக்கும் ஏனைய உறவினர்களுக்கும் சுபசெய்தி பறந்தது. ஆனந்த வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. எல்லோரும் இறைவனை நன்றி உணர்வோடு வழிபாடு செய்தனர்.

1948இற் போர் நின்று சமாதானமாகி, கப்பற் போக்கு வரத்துத் தொடங்கியபோது சின்னத்தம்பு யாழ்ப்பாணத்துக்கு மீண்டுவந்து மகனைக் கண் நிறையக்கண்டு பிள்ளைகளைத் தூக்கித் தூக்கி ஆனந்தமடைந்தார்.சில மாதம் உற்றார் உறவினர்களுடன் கலந்து மகிழ்ந்திருந்து மனைவி மக்களை அழைத்துக் கொண்டு மலேசியா சென்றார்.

மலேசியாவில் உழைத்தது போதும் என மனத்திருப்தி வளர்ந்ததனால் 1955 இல் ஓய்வு பெற்றுக் கொண்டு குடும்பத்துடன் நாடு திரும்பினார். இளவாலையில் குடியேற விரும்பியிருந்தமையால் முன்னரே தமையனார். உதவியுடன் ஒரு வசதியான காணி வாங்கியிருந்தார். அதிலே தான் விரும்பிய அமைப்பிலே வீடுகட்டி உறவினர்களுக்கும் ஊரவர்க்கும் பல்வேறு வகையில் ஆதரவாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாகவும் வாழ்ந்து வந்தனர். வாழ்க்கை வசதி குறைந்தோர் வந்தால் உணவு முதலியன கொடுத்து ஆதரித்து வந்தமையால் "அவ செல்லச்சரசுவதிதான்" என மனம் நிறைந்து போற்றுவர். ஆனை விழுந்தான் திருவருளால் ஆண்குழந்தை கிடைத்தது. பரம்பரைப் பெயரைச் சார்ந்த குமாரலிங்கம் என்ற பெயரிட்டு மகிழ்ந்தனர்.

தையற்கலையில் மிக ஆர்வமுடைய இவர் பிள்ளைகளுக்கு விதம் விதமான சட்டைகள் தைத்து அணிவித்து மகிழ்வார். சகோதரி, மருமக்கள் முதலானோருக்குத் தையற் பயிற்சி அளித்துவந்தார். செய்தித் தாள்கள் படிப்பதிலும் புத்தகம் வாசிப்பதிலும் பெரு விருப்பம் முதுமையில் வாசிப்பதில் முழுநேரமும் ஈடுபட்டிருப்பார். பிள்ளைகளின் கல்வியிலும் பழக்க வழக்கங்களிலும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார்.

மூத்த மகன் கணேசலிங்கம் கல்வியிற் சிறந்து உதவி வைத்தியராகப் பயின்று அரச சேவையாளரானார். கல்லூரி அதிபர் சுவாமிநாதன் ஆனந்தக்குமாரசாமியை மூத்த மகளுக்குக் கணவனாகத் தேர்ந்தெடுத்தனர். மூத்த மகனுக்கும் இளைய மகளுக்கும் உரிய பருவத்தில் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சகத்தில் நிருவாகியாயிருந்த இளவாலை திருநாவுக்கரசு கிருபாகரனையும் அவருடைய தங்கை மகேஸ்வரியையும் மாற்றுக்கு மாறாகத் திருமணம் செய்து வைத்தனர்.

1974 இல் கணவர் சிவபதம் அடைந்து விட குடும்ப நிர்வாகத்தை ஏற்கவேண்டியவரானார். 1980 இல் தனது தம்பியார் செல்லத்துரையின் குடும்பத்துடன் இந்தியாவிலுள்ள திருத்தலங்களுக்கு சென்று தரிசித்து மகிழ்ந்தார். இளைய மகனுக்குத் தம்பியார் செல்லத்துரையின் மகளும் ஆங்கில பாட ஆசிரியையுமான வசந்தியை வாழ்க்கைத் துணைவியாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசலிங்கம் ஓய்வு பெற்ற பின் தனிப்பட்ட வைத்திய சேவை செய்ய விரும்பியபோதும் அரசாங்கம் இவரை விட்டபாடில்லை. மருத்துவ கலாநிதி வைத்தியநாதர் சற்குணநாயகம் நன்கொடையாக அளித்த காணியில் வடமாகாண சுகாதாரப் பணியாளர் இராசா ரவீந்திரன் ஒதுக்கிக் கொடுத்த நிதியில் ஊர் மக்களின் ஆதரவு திரட்டி இளவாலையில் ஒரு மருத்துவ மனை கட்டி முடித்த சேவையை தாயார் நினைந்து நினைந்து மகிழ்வார். சுகவீனமுற்றிருந்த காலத்தில் மகன் பார்த்துப் பார்த்து உரிய மருந்து கொடுப்பதையும் தன்னை உடனிருந்து பராமரிக்கும் மகள்மாரையும் குறிப்பாக இளைய மகளையும் நினைத்து ஈன்ற பொழுதிற் பெரிதும் உவப்பார்.

இளைய மகன் குமாரலிங்கம் மின்சார சபையில் இணைந்திருந்து மின் அத்தியட்சகராகப் பதிவி பெற்றிருப்பதும் பொதுச் சேவையில் விசேஷமாக ஆனை விழுந்தான் ஸ்ரீ விக்கின விநாயகராலய வளர்ச்சியில் அதிக ஈடுபாடுடையவராக விளங்க ஊக்கமளித்தும் செயற்பாடுகளைக் கண்டு கேட்டும் அகமகிழ்வெய்துவார். சிவ தீட்சை பெற்று தினந்தோறும் அநுட்டானம் பார்த்தவர் கடவுள் வழிபாட்டில் மிகுந்த ஆர்வம் உடையவர். காலை மாலை வீட்டிலே தொழுவதுடன் ஆனைவிழுந்தானுக்கு வெள்ளிதோறும் ஒழுங்காகச் செல்லுவார் முதுமையால் நடந்து செல்வது கடினமாக இருந்த காலத்தில் இளைய மகனுடன் மோட்டார் சைக்கிலில் கோயிலுக்குச் செல்வார் மேலும் நாதோலை அம்மன், நகுலேஸ்வரர், மாவைக்கந்தன், துர்க்கையம்மன் ஆலயங்களில் நிகழும் விசேஷ வழிபாடுகளிலும் தவறாமல் கலந்து கொள்வார். இவரது தாயார் சின்னக்குட்டிப்பிள்ளை அவர்கள் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவையானுக்கு சண்டேஸ்வரர் செய்வித்ததைப் பின்பற்றி தானும் ஆனைவிழுந்தான் சண்டேஸ்வரருக்கு ஆலயமும் கருங்கல் விக்கிரகமும் உபயஞ் செய்தார். தேரோடத் தொடங்க ஐம்பொன் சண்டேஸ்வர விக்கிரகமும் செய்வித்துக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைவிழுந்தான் விநாயகர். நாதோலை அம்மன் ஆலயங்களின் திருவிழா உபயங்களை பக்தியுடன் மேற்கொண்டு வந்தார். தனது பிள்ளைகள் எல்லோரும் இணைந்து ஆனைவிழுந்தான் கொடியேற்ற உபயத்தை ஏற்கச் செய்தார்.

**லண்டன் மாநகரில்** Accounts Executive ஆக பணிபுரியும் முதற் பேரன் சிவானந்தன் (சிவாஜி) உறவினர் கந்தையா சங்கரப்பிள்ளை மகாலட்சுமி தம்பதியரின் மகள் ஜனனி (ஜனா)யை கடிமணம் புரிந்து பவன் என்ற பூட்டனைப் பெற்றுக் கொடுத்திருகின்றார். அடுத்த பேரன் ரமேஷ் கனடாவில் சிவலிங்கம் ஜெகஜனனி தம்பதியரின் தலைமகள் சிவாஜினிக்கு மாலையிட்டு கணதீபன், பிரியதர்சினி என இரண்டு பூட்டப்பிள்ளைகளையும் மற்றப் பேரன் பிரகதீஷ் (சேயோன்) சைலஜாவை மணஞ்செய்து கானுஜன், மதுஷாயினி என இரு பூட்டப்பிள்ளைகளை கொடுத்திருக்கின்றார். பேரன் சசிகேஷ் லண்டன் Oxford பல்கலைக்கழகத்தில் இரசாயனத்துறையில் கலாநிதிப்பட்டக் கல்வியுடன் ஆய்வும் செய்து வருகின்றார். ஐந்தாவது பேரன் ஜனகன் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் கணிய அளவையியல் மாணவன். பேத்தி கர்ணிகா மகாஜனக்கல்லூரி மாணவி

இங்ஙனம் வாழ்வாங்கு வாழ்ந்து மக்கள் முதல் பூட்டப்பிள்ளைகளின் சிறப்புகளைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்து பின்பு படுக்கையில் கிடக்க நேரிட்ட வேளையில் தேவாரம் பாடி இறைவனைப் போற்றிக் கொண்டிருப்பார். படுக்கையில் கிடக்க வேண்டி வந்த போதும் அது தான் செய்த வினைகளை அநுபவிப்பதாக சொல்லி அமைதியாக கிடந்து மனநிறைவோடு நான்கு பிள்ளைகளும் உடன் இருக்க 17.02.2010 புதன் கிழமை சதுர்த்தி திதியில் ஆனைவிழுந்தான் திருவடி சார்ந்து இன்புற்றிருக்கின்றார்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**வித்துவான்- ஆ.தா.ஆறுமுகம் B.A**
**ஓய்வு பெற்ற அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்ந்து காட்டிய பேரன்னை

எங்கள் ஊரின் மூத்த பேரன்னையாக நூறாண்டை அண்மித்து வாழ்ந்த உத்தமத்தாயே! நாட்டுக்கு உழைக்கும் நன்மைந்தர்களைத் தந்து நாடும் வீடும் செழிக்க நல்லன செய்து வாழவைத்த பெருமைக்குரிய தாயே, அடக்கமான, அமைதியான, நிறைவான வாழ்வு வாழ்ந்து காட்டிய இல்லறத்தலைவியே, ஆனைவிழுந்தான் விநாயகரை அல்லும் பகலும் நினைந்து வணங்கும் புண்ணியப் பேறு பெற்ற பேரன்னையே.

நான் மெய்கண்டானில் சேவை செய்யும் காலத்தில் திருநீற்றுப்பூச்சுடன் தெய்வம் போல் காட்சி தந்து எங்கள் குடும்ப நலங்கேட்டு மானசீகமாக வாழ்த்துகின்ற தெய்வத்தாயே சந்ததி தழைக்க கணவருடன் இணைந்து அறம் பல செய்த அன்னையே உங்கள் ஆன்மா இறைவன் திருவடியில் இன்புற வேண்டி அஞ்சலி செய்கின்றேன்.

கலாபூஷணம், சைவப்புலவர்
சு. செல்லத்துரை

இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Beloved Great Grandma

I am very Proud of my Pootyama who has lived for more than ninety four years before going to heaven.

During my visit to Jaffna when I was Little I used to run after the baby goat and she always followed me and took care of me I still remember her yelling at me not to go near the well she was such a caring and affectionate angel My dad always says that his Ammama cooks very tasty food and variety of short eats even when she was old & my mum says that my Great Grandma used to bring very sweet honey Mangoes. That's how Sweet my Pootyama was I feel Missed out on these experiences.

I am sure that you are very happy in Heaven and please bless and take care of everybody from there. We will always remember your sweetness and talk about you forever.

**Bavvan Sivananthan**
**Great Grandson**
**London.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
*Love is God*

# ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்
# Sri Nagulambika sametha Sri Naguleswara swamy Temple


Sivasri K. Naguleswara Kurukkal *J.P. (All Island)*
Governing Authority & Chief Priest
Naguleswaram, Keerimalai
Kankesanthurai, Sri Lanka.
T.P No: 060221 2440

சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் (ச.நீ)
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை,
காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா
தொ. இல: 060221 2440


---

திருமதி சின்னத்தம்பு சரஸ்வதி அவர்கள் இறைவனடி சேர்ந்த துக்க செய்தி அறிந்து துயரம் அடைந்தோம் அன்னார் தெய்வபக்தி கொண்டவர்.

கீரிமலை நகுலேஸ்வர ஆலய மஹோற்சவ காலத்திலும் சிவராத்திரி விசேட பூசைகளிலும் பிரதோஷ விரத காலங்களிலும் தவறாது ஆலயத்திற்கு வந்து பக்தி சிரத்தையுடன் வழிபடுபவர்.
எல்லோருடனும் அன்பாக பழகுவதுடன் தான தருமங்களும் செய்து வந்தவர்.

நன்மக்களை பெற்று சிறந்த சமய, சமூக பணிகளை அவர்களைக் கொண்டும் பேரப்பிள்ளைகளைக் கொண்டும் செய்வித்து எல்லோருக்கும் வழிகாட்டியாக திகழ்ந்தவர். எனது பவள விழாவிற்கு இவர்களது பிள்ளைகள் ஆற்றிய பணியும் போற்றுதற்குரியது. அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நகுலேஸ்வரப் பெருமானை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மா சாந்தி உரை

புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும் இளவாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரத்துவம் அடைந்த திருமதி சின்னத்தம்பு சரஸ்வதி அவர்கள் ஆலயத்தின் மாதாந்த பூசையில் 5ம் பூசையையும் கொடியேற்ற மகோற்சவத்தையும் ஆவணி சதுர்த்தி உபயத்தையும் தமது குடும்ப உபயமாக செய்து மகிழ்பவர் ஆலயத்தின் பல திருப்பணி வேலைகளை குறிப்பாக சண்டேஸ்வரரிற்கு ஆலயம் அமைத்ததுடன் சண்டேஸ்வர உற்சவ மூர்த்தியையும் தனது உபயமாக செய்து கொடுத்தவர்.

அன்னாரின் இழப்பால் துயரும் குடும்பம் மற்றும் சுற்றத்தாருக்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆனைவிழுந்தான் விநாயகர் பெருமானை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சிவஸ்ரீ இராமபாலச்சந்திரக்குருக்கள்
(ஆலய பிரதம குரு)
இளவாலை ஆனை விழுந்தான்
பிள்ளையார் ஆலயம்
இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**E.T.Anton Balasingam L.L.M, J.P**
**Retired High Cort Judge**
**Member Administrative**
**Appeals Tribunal**

அமரர் திருமதி சின்னத்தம்பு சரஸ்வதி அவர்கள் எனக்கு பல வருடங்களாக அறிமுகமானவர். அன்னார் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த மிகவும் கௌவரமான குடும்பத்தில் தாமோதரம்பிள்ளையின் மகளாகப் பிறந்து இளவாலையில் புகழ் பூத்த குடும்பத்தில் உதித்த கந்தப்பிள்ளை சின்னத்தம்பு என்பவரை திருமணம் செய்தார். இவர் தனது காலத்தில் பல்வேறுபட்ட குடும்ப சமூக சேவைகளில் ஈடுபட்டு உற்றார், உறவினர்கள் ஊரவர்களின் அன்புக்குப்பாத்திரமானார்.

கணவரின் வேலைப்பழுகளுக்கு மத்தியிலும் அவருடன் பல இடங்களுக்குச் சென்று தனது துணைவருக்கு எந்த நேரத்திலும் பணிபுரிந்து தனது பிள்ளைகளையும் நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அர்ப்பணித்துள்ளார். இவரது அன்பு பாசம், பற்று என்பன இவரது குடும்பத்துக்கு மிக ஆறுதலாக இருந்தது. இவரது இழப்பு இவரது குடும்பத்துக்கு மாத்திரமல்லாமல் கிராமத்துக்கே ஒரு பெரிய இழப்பாகும். இவரது சேவை நாட்டுக்கு பூர்த்தியாகிவிட்டது. என்பதைக் கருத்தில் கொண்டு காலன் இவரை இறைவனிடம் சேர்த்து விட்டான்.

ஓம் சாந்தி

**அன்ரன் பாலசிங்கம்**

**No.60/13A, Liyanage Road**
**Dehiwala.**
**Tele: 2736841, 2727036**
**Mobile:071 8609153**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி சரஸ்வதி சின்னத்தம்பு அவர்கள்
## உறுதி குன்றா உத்தமி

அமரர் சரஸ்வதி அம்மாவை நேரில் கண்டு ஓரிருநாட்கள் கதைத்தது ஒழிய அவர்களுடன் நான் பழகி அறியேன் ஆனால் அவர்தம் எச்சங்களான பிள்ளைகளை நன்கு அறிவேன் முக்கியமாக தம்பி குமாரலிங்கம் அவர்களை அடிக்கடி சந்திப்பது உண்டு.

எமது ஆயாக்கடவைப் பிள்ளையாரின் கொடிஏற்ற மாலைத்திருவிழா உபயகாரராக இருப்பதாலும் அவரை அடியவராகவும் பார்க்கும் சந்தர்ப்பம் அடிக்கடி கிடைக்கும் இவர்கள் புன்னாலைக்கட்டுவன் பிள்ளையாரின் ஆளுமைக்கு உட்பட்ட படியால் ஆயாக்கடவையான் ஆனைவிழுந்தானின் அடியவராக்கி தனது கொடி ஏற்ற உபயத்தை கொடுத்துவிட்டார்.

அவர் உரிய உபயப்பொறுப்புக்களை ஏற்று ஒழுங்காக கண்ணியமாக செய்து வருவதையும் நன்கு அறிவேன். அதுமட்டுமல்ல எந்தகோவிலுக்கு சென்று வழிபாட்டாலும் அங்கு உள்ள சிறப்பான திருப்பணிகளை பார்த்து ஆனைவிழுந்தானிலும் செய்யவேண்டும் என்று என்னுடன் கலந்து ஆலோசிப்பார். தமது ஆலயம் வீடுகள் மின்இணைப்பை பெறும் நோக்குடன் எந்த பிராமண குலத்தவர் சென்றாலும் அவர்களுக்கு குருமாருக்கு உரிய மரியாதை கொடுத்து கடமைகளை முடித்து விரைவாக அனுப்புவார். இவர்களின் விருந்தோம்பல் பண்பு, பெரியோரை கனம்பண்ணல், ஆக்கமுடைமை, இறைபக்தி என்பது அவரின் தாயின் மரபணு மூலம் கடத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

பெற்றோருக்கு நல்லதோர் மகளாக கணவனுக்கு உரிய ஏற்றத்தாழ்வுகளில் உடனிருந்து இறுதிக்காலத்தில் பணிவிடை செய்தும் உத்தமியாகவும் பிள்ளைகளை சான்றோர் ஆக்கியும் பேரப்பிள்ளைகளின் பாட்டியாகவும் வாழ்ந்த உத்தமியை வாழ்த்தி அவரின் ஆத்மா சாந்தி அடைய ஆயாக்கடவையானையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைவிழுந்தானையும் பிரார்த்தித்து அவர்தம் குடும்பத்தாருடன் அமைதி பெறுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு (திருவள்ளுவர்)

தியாக கெங்காதரகுருக்கள்
புன்னாலைக்கட்டுவான்

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந ப்ரசோதயாத்.

**கருத்து:** " ஓம் காயத்திரிதாயே முக்காலங்களிலும் (நிகழ் காலம், எதிர் காலம், இறந்தகாலம்) மூவுலகங்களிலும் (பூமி, சுவர்க்கம், பாதாளம்) மூன்று குணங்களிலும் (தாத்வீக, ராஜஸ, தாமஸ) உறைபவளே எப்படி சூரியனின் ஒளி இருளை விலக்குகிறதோ அப்படி என் புத்தியிலுள்ள அறியாமை விலக்குவாயாக - எனது புத்தி சாந்தியும் பிரகாசமும் பூரணத்துவமும் பெறுமாறு உன்னை நான் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை மின்சாரசபையின், குளப்பிட்டி மின்
பாவனையாளர் சேவை நிலையத்தின் மின்
அத்தியட்சகர் சி.குமாரலிங்கம் ஐயா
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி

அவர்களின் பிரிவுச் செய்தியறிந்து
அதிர்ச்சியடைந்தோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின்
ஆத்மா இறைவன் திருவடியில்
சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

(95266)

மின்மானி வாசிப்பாளர்கள்,
மின்பாவனையாளர்
சேவை நிலையம், குளப்பிட்டி.

## கண்ணீர் அஞ்சலி



இ.மி.ச.வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும்
விளையாட்டுச் சங்கத்தின் தலைவர்
சி.குமாரலிங்கம் (மின் அத்தியட்சகர்,
யாழ்.புறநகர்) அவர்களின் அன்புத் தாய்

### திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ.மி.ச.வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்,
இ.மி.ச., யாழ்ப்பாணம்.

(சி/564981)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
21
02
1916



இறப்பு
17
02
2010

எமது கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் திரு.சி.குமாரலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் சரஸ்வதி சின்னத்தம்பு

வெள்ளை உள்ளம் கொண்ட உன்னை வென்றானோ காலனவன்

ஊர் போற்ற உத்தமியாய் வாழ்ந்த நீர்

ஊர் கூடி கதறியழ விட்டுச் சென்றாயோ?

நீ கட்டிய கூட்டுக்கோ வேடன் குறி பார்த்து விட்டானோ அம்பு

அது உன் உயிரைப் பறித்தது கண்டு

பிள்ளைகள் சிறகொடிந்த பறவை போல்

செய்வதறியாது அம்மா, அம்மா என்று

கதறியழும் அபயக்குரல் உன் காதில் விழவில்லையா?

உன்னை இழந்ததினால் ஊரும் சோகமாய் காட்சி அளிக்குதையா

நித்தம் உன்னை முத்தமிட்டுச் செல்லும் தென்றலும் உன் மறைவு கண்டு

எம்மைக் கேள்வி ஒன்று கேட்டுவிட்டு சோகமாய் செல்வது காண்பாயா?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

18.02.2010

பிரிவால் துயருறும்
கிராம அபிவிருத்திச் சங்கம்
இளவாலை வடக்கு, இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டெங்கு நோயினது அறிகுறிகள்**

- காய்ச்சல், தலைவலி, வாந்தி, நிணநீர்க் கணுக்கள் வீங்குதல், மூட்டுநோவு, மூட்டுவீக்கம், தசைநோவு, தோலின் கீழ் சிவப்பு நிறத் தடங்கள்.
- டெங்குக் காய்ச்சலில் டெங்கு குருதிப் பெருக்கு, அடங்கு அதிர்ச்சி ஆகிய நிலைகள் ஏற்படுவதுடன் மரணமும் சம்பவிக்கலாம்.
- நான்கு வகையான டெங்கு வைரஸ் கிருமிநோயை ஏற்படுத்துவதால் அதே வகை நோய்க்கிருமி தொற்றினாலன்றி மீண்டும் நோய் ஏற்படலாம்.

**எங்களுக்கு வராமல் பாதுக்காக்க எமது சுற்றாடலில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை இல்லாமல் செய்வதே மிகச் சிறந்த வழியாகும்.**

மழை பெய்யும் வேளைகளில் நீர் தேங்கக்கூடிய சிறிய கொள்கலன்கள், பொலித்தீன் பைகள், தகரப் பேணிகள், பிளாஸ்ரிக் பொருட்கள், இளநீர்க் கோம்பைகள், சிரட்டைகள் எரியுங்கள் அல்லது புதைத்து விடுங்கள்.

பூச்சாடிகளில் நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள், நீர் சேகரிக்கும் தொட்டிகள், பாத்திரங்களை நன்றாகத் தேய்த்துக் கழுவி நீரை நான்கு நாட்களுக்கு ஒரு தடவையாவது மாற்றிக் கொள்ளுங்கள்.

வீட்டின் பின் புறத்தில், வீட்டுச் சுற்றாடலில் சேகரித்து வைக்கும் தேவையற்ற பாத்திரங்கள், ஏனைய பொருட்களில் நீர் தேங்காதவாறு கவிழ்த்து வையுங்கள் அல்லது அழித்து விடுங்கள்.

ஓட்டில் பீலிகளில், வாய்க்காலிகளில் நீர் தேங்காதவாறு நீர் வடித்தோடத்தக்க வகையில் அடிக்கடி துப்பரவு செய்யுங்கள்.
ரயர்கள்,மரப்பொந்து என்பவற்றில் நீர் தேங்காதவாறு மண் போட்டு மூடி விடுங்கள் அல்லது ரயர்களில் நீர் தேங்காது துளையிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடலில் நுளம்புகள் தங்காதவாறு பற்றைகளை வெட்டி,குப்பை கூழங்களை எரித்து சுற்றாடலைத் தூய்மையாகப் பேணுங்கள்.

**உங்களை நுளம்புக் கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ள.**

வீடுகள், அலுவலங்களில் நுளம்பு புகாதவலை பொருந்துதல், நோய்த் தொற்று ஏற்பட்டவர்களை நுளம்பு வலைகளினுள் ஓய்வெடுக்கச் செய்தல்.

உடலை மூடி உடை அணிதல், புகையூட்டுதல், நுளம்புச் சுருள் கொளுத்துால், நுளம்பு விரட்டி எண்ணை பூசுதல் போன்ற நடவடிக்கைகள் மூலமும் நுளம்புக் கடியிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

## நோயறிகுறிகள் ஏற்பட்டால்,

- ❖ காய்ச்சல் ஏற்பட்டதும் முடியுமான வரை படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.
- ❖ அதிகமான நீராகாரம் அருந்திச் செய்யுங்கள்.
- ❖ பாடசாலைகள், வேலைத்தளங்களுக்குச் செல்வதைத் தவிருங்கள்.
- ❖ அஸ்பிரின், அஸ்பிரின் கலந்த மருந்துகளை பாவிக்கக் கூடாது பதிலாக பரசிற்றமோல் பாவியுங்கள்.
- ❖ உடனடியாகவே அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று தகுந்த வைத்திய ஆலோசனையுடன் உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

டெங்குக் காய்ச்சல், சிக்குன்குனியா இரண்டு நோய்களும் ஒரே வகையான நுளம்புகளிலேயே பரப்பப்படுகிறது.

நுளம்புகள் பெருகாமல் எமது சுற்றாடலை பாது காப்பாக வைத்திருப்பதன் மூலம் இந்நோய்கள் எமக்கு வராமல் பாதுகாத்துக்கொள்ளலாம்.

நோய் ஏற்பட்டால் ஆரம்பத்திலேயே உரிய வைத்திய ஆலோசனை பெற்று ஏனையோருக்கு ஏற்படாமல் பாதுகாப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டெங்குக் காய்ச்சல், சிக்குன் குனியா**

| | |
|---|---|
| நோய்க் காரணி | - வைரஸ் |
| பரப்பும் நுளம்புகள் | - ஏடிஸ் இஜிப்ரி (Aedes aegypti) |
| | - ஏடிஸ் எல்போபிக்டஸ் (Aedes albopictus) |

❖ இந்த நுளம்புகள் பகல் வேளைகளிலேயே மனிதரைக் கடிக்கும் பழக்கம் உடையவை.
(பெரும்பாலும் காலை 6.00மணி – 9.00மணி, மாலை 3.00 மணி – 6.00மணி)

❖ இரண்டு நோய்களினது அறிகுறிகளும் ஆரம்பத்தில் ஒரே மாதிரியானதாகவே இருக்கும்.

❖ காய்ச்சல், தலைவலி, வாந்தி, மூட்டுநோவு, மூட்டுவீக்கம், தசைநோவு, தோலின் கீழ் சிவப்புநிறத்தடங்கள்.

❖ வெவ்வேறு வகையான வைரஸ்கள் நோயை ஏற்படுத்துவதால் அதே வகையான நோய்க்கிருமி தொற்றினாலன்றி மீண்டும் நோய் ஏற்படும்.

❖ டெங்குக் காய்ச்சலில் டெங்கு குருதிப் பெருக்கு, டெங்கு அதிர்ச்சி ஆகிய நிலைகள் ஏற்படுவதுடன் மரணமும் சம்பவிக்கலாம்.

❖ சிக்கன்குனியாவில் உடல் உபாதைகள் நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்குமெனினும் மரணம் சம்பவிப்பது குறைவு.

**டெங்குக் காய்ச்சல், சிக்கன்குனியா எங்களுக்கு வராமல் பாதுகாக்க எமது சுற்றாடலில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை இல்லாமல் செய்வதே மிகச் சிறந்த வழியாகும்.**

மழை பெய்யும் வேளைகளில் நீர் தேங்கக்கூடிய சிறிய கொள்கலன்கள். பொலித்தீன் பைகள், தகரப்பேணிகள், பிலாஸ்ரிக் பொருட்கள், இளநீர்க் கோம்பை,சிரட்டைகளை எரியுங்கள் அல்லது புகைத்து விடுங்கள்.

வீட்டின் புறத்தில் வீட்டுச் சுற்றாடலில் சேகரித்து வைக்கும் தேவையற்ற பாத்திரங்கள் ஏனைய பொருட்களில் நீர் தேங்காதவாறு கவிழ்ந்து வையுங்கள் அல்லது அழித்து விடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டில் பீலிகளில் வாய்க்கல்களில் நீர் தேங்காதவாறு நீர் வடித்தோடத்தக்க வகையில் அடிக்கடி துப்பரவு செய்யுங்கள்.

ரயர்கள். மரப்பொந்து என்பவற்றில் நீர் தேங்காதவாறு மண் போட்டு மூடி விடுங்கள் அல்லது ரயர்களில் நீர் தேங்காது துளையிடுங்கள்

சுற்றாடலில் நுளம்புகள் தங்காதவாறு பற்றைகளை வெட்டி, குப்பை கூழங்களை எரித்து சுற்றாடலைத் தூய்மையாகப் பேணுங்கள்.

பூச்சாடிகளில் நீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ளுங்கள், நீர் சேகரிக்கும் தொட்டிகள், பாத்திரங்களை நன்றாகத் தேய்த்துக் கழுவி நீரை நான்கு நாட்களுக்கு ஒரு தடவையாவது மாற்றிக்கொள்ளுங்கள்.

**எங்களை நுளம்புக் கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ள,**

வீடுகள், அலுவலகங்களில் நுளம்பு புகாதவிலை பொருந்துதல், நோய்த் தொற்று ஏற்பட்டவர்களை நுளம்பு வலைகளினுள் ஓய்வெடுக்கச் செய்தல்.

உடலை மூடி உடை அணிதல்,புகையூட்டுதல், நுளம்புச் சுருள் கொளுத்தல், நுளம்பு விரட்டி எண்ணை பூசுதல் போன்ற நடவடிக்கைகள் மூலமும் நுளம்புக் கடியிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**நோய் அறிகுறிகள் ஏற்பட்டால்,**

- ❖ காய்ச்சல ஏற்பட்டதும் முடியுமானவரை படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் அதிகமான நீராகாரம் அருந்திச் செய்யுங்கள்.
- ❖ பாடசாலைகள், வேலைத்தலங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- ❖ காய்ச்சலிருப்பின் பரசிற்றமோல் பாவித்தல் அஸ்பிரின், அஸ்பிரின் கலந்த மருந்துகளை பாவிக்கக் கூடாது.
- ❖ உடனடியாகவே அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று தகுந்த வைத்திய ஆலோசனையுடன் உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எமது குடும்ப குலவிளக்காய் வாழ்ந்து
17.02.2010 சிவபதமடைந்த
அமரர் திருமதி சரஸ்வதி சின்னத்தம்பு அவர்களின்
பிரிவுச் செய்தி கேட்டு உடன்
எமது இல்லத்திற்கு வருகைதந்து இறுதிக்
கிரியைகளில் கலந்து கொண்டும், தொலைவிலிருந்து
தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபத்தை
தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி மூலமும்,
மலர்வளையம் மூலமும் அனுதாபம் தெரிவித்த
அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியறிதலைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

இளவாலை.


ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் - கொக்குவில். T.P:077 2209474.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தம்பு அ


போதிநாதன் மகன் ந
வி

ஐயாத்தை உ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களின் வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



No: 103

ஸ்ரீ சாயி பிறின்டேர்ஸ் - கொக்குவில். T.P:021 4590244.
(நந்தாவில் அம்மன் கோவிலடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org